**சுருக்கம்**

அறிவிப்புகள் 2022–23 – தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு – 2022–ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் 6 முறை கிராம சபை கூட்டங்கள் நடத்துவது – கூடுதல் கிராம சபைக் கூட்டங்கள் மார்ச் 22 மற்றும் நவம்பர் 1 ஆகிய நாட்களில் நடத்திட ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா.2) துறை**

**அரசாணை (நிலை) எண்.65**

**நாள் 24.05.2022.**
**சுபகிருது, வைகாசி 10,**
**திருவள்ளுவர் ஆண்டு 2053.**

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.245 ஊரக வளர்ச்சி (சி1) துறை, நாள்.19.11.1998.
2. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சட்டப்பேரவை விதி எண்.110–ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பு நாள் 22.04.2022.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.73232/2022/ப.ரா.2–3, நாள் 01.05.2022.

*****

**ஆணை:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவை விதி எண்.110–ன் கீழ் **"தமிழகத்தின் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் வருடத்திற்கு 4 முறை அதாவது குடியரசு தினம், உழைப்பாளர் தினம், சுதந்திர தினம், காந்தி ஜெயந்தி ஆகிய தினங்களில் கிராம சபை கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. மக்கள் பங்கேற்பதையும்**

**முடிவெடுப்பதையும் அதிகப்படுத்தும் வகையில் இனி ஒவ்வொரு ஆண்டும் 6 முறை கிராம சபை கூட்டங்கள் நடத்தப்படும். கூடுதல் கிராம சபை கூட்டங்கள் உலக தண்ணீர் தினமான, மார்ச்–22 மற்றும் தமிழ்நாடு உள்ளாட்சி தினமான நவம்பர்–01 ஆகிய நாட்களில் நடத்தப்படும்**" என அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

2. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994–ம் ஆண்டின் பிரிவு 3 மற்றும் அரசு ஆணை(நிலை) எண்.245, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள்.19.11.1998–ன் படி தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராம சபை கூட்டமானது ஒவ்வொரு ஆண்டும் காலாண்டிற்கு ஒருமுறை என்ற முறையில் ஜனவரி–26, மே–01, ஆகஸ்டு–15, அக்டோபர்–02 நாட்களில் நடத்தப்பட வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது என்றும், கிராம சபை என்கிற அமைப்பானது ஊராட்சியிலுள்ள அனைத்து வாக்காளர்களையும் உள்ளடக்கியது. கிராம சபைக்கு குறிப்பிட்ட அதிகாரங்களும், பொறுப்புகளும் வழங்கப்பட்டுள்ளன எனவும், பல்வேறு அரசு திட்டங்களை செயல்படுத்துவதில் மக்களின் பங்கேற்பை உறுதி செய்வதற்கு அவ்வப்போது சிறப்பு கிராம சபைக் கூட்டங்கள் தேவையின் அடிப்படையில் குறுகிய கால அறிவுப்புகள் மூலம் நடத்தப்பட்டு வருகின்றன. இந்தக் குறுகிய கால அறிவிப்புகள் மூலம் நடத்தப்படும் போது மக்களின் பங்கேற்பு குறைவாக உள்ளது குறிப்பாக அவ்வூராட்சியிலிருந்து தொழில் காரணமாக வெளியூர்களில் வசிக்கும் மக்கள் பங்கேற்று பயனடைவது சிரமமாக உள்ளது எனவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் குறிப்பிட்டுள்ளார்.

3. மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், இதனை கருத்திற்கொண்டு கட்டாயமாகக் குறிப்பிட்ட கால இடைவெளியில் நடத்த வேண்டிய கிராம சபைக் கூட்டங்களின் எண்ணிக்கையை அதிகரித்து மக்களின் பங்கேற்பினை உறுதி செய்வது அவசியம் எனக் கருதி, இவ்வாண்டு முதல், ஆண்டிற்கு 6 கிராம சபை கூட்டங்கள் நடத்தப்படும் எனவும், தற்போது கூடுதலாக மார்ச்–22 (உலக தண்ணீர் தினம்), நவம்பர்–1 (உள்ளாட்சிகள் தினம்) ஆகிய இரு தினங்களில் கிராம சபை கூட்டங்கள் நடத்தபட வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கிணங்க இனிவரும் ஆண்டுகளில் மார்ச்–22 உலக தண்ணீர் தினம், நவம்பர்–01 உள்ளாட்சி தினம் ஆகிய நாட்களிலும் கிராம சபை கூட்டங்கள் நடத்திட ஆணை வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

4. எனவே, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்க முடிவு செய்தது. அதன்படி, நான்கு முறை கிராம சபை கூட்டங்கள் நடத்துவதற்கான தற்பொழுது நடைமுறையிலுள்ள மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையை மாற்றியமைத்து ஜனவரி 26–குடியரசு தினம், மார்ச் 22–உலக தண்ணீர் தினம், மே 1–தொழிலாளர் தினம், ஆகஸ்டு 15–சுதந்திர தினம், அக்டோபர் 2–காந்தி ஜெயந்தி தினம், நவம்பர் 1–உள்ளாட்சிகள் தினம் ஆகிய ஆறு நாட்களில் ஒவ்வொரு ஊராட்சியிலும் கிராம சபை கூட்டங்கள் நடத்திட அரசு ஆணையிடுகிறது. மேலும், மார்ச் 22 மற்றும் நவம்பர் 1 ஆம் தேதியன்று நடைபெறும் கிராம சபை கூட்டங்களில் கீழ்க்காணும் நடவடிக்கைகளை நிறைவேற்ற அறிவுறுத்தப்படுகிறது:

**மார்ச்–22 (உலக தண்ணீர் தினம்)**

நீர்வளத்தைக் காப்பது மற்றும் அதனை பெருக்குவது குறித்த விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதும் தண்ணீரின் தேவையையும், சிக்கனத்தையும் மனதில் வைத்து செயல்பட அறிவுறுத்துதல் மற்றும் தற்போது ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் நாளொன்றுக்கு தனிநபர் ஒருவருக்கு சராசரியாக 55 லிட்டர் (LPCD) பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைப்பதை உறுதிப்படுத்துதல். அன்றைய தினத்தில் தண்ணீரை வீணாக்க மாட்டோம். மாசுபடுத்தாமல், சிக்கனமாக பயன்படுத்தி **'உயிர்போல் காப்போம்'** என்ற உறுதி மொழியை அனைவர் மனதில் ஏற்று அதனை நிறைவேற்ற உறுதிமொழி எடுத்தல் போன்ற நடவடிக்கைகளை கிராம சபையில் நிறைவேற்றப்பட வேண்டும்.

**நவம்பர் –01 (உள்ளாட்சிகள் தினம்)**

இந்த கிராம சபைக் கூட்டத்தில், அவ்வூராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து முழுமையாக விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் இந்த கிராம சபைக் கூட்டங்களில் ஏதேனும் ஒரு ஊராட்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் கூட்டப்பட்டு நலத்திட்ட உதவிகள் பல்வேறு துறை பயனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

5. சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் கிராம சபை கூட்டம் நடைபெறும் நாட்களில் தங்கள் கீழ் பணிபுரியும் பல்வேறு துறை அலுவலர்களை

பற்றாளர்களாக (Nodal Officer) அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். கிராமசபை கூட்டம் முடிந்தவுடன் மாவட்ட ஆட்சியர்கள் தங்களது அறிக்கையை ஒரு வாரத்திற்குள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து பெறப்பட்ட அறிக்கைகளை ஒருங்கிணைந்து அரசுக்கு அனுப்பி வைக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

பெ.அமுதா
அரசு முதன்மைச் செயலாளர்

**பெறுநர்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை 15
கூடுதல் தலைமைச் செயலாளர் / தலைமை இயக்குநர் (பயிற்சி), சென்னை 15
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், சென்னை–34.
தலைமை செயல் அலுவலர், தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம், சென்னை–32.
செயலாளர், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், சென்னை–105.
இயக்குநர், மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், மறைமலைநகர், செங்கல்பட்டு.
திட்ட இயக்குநர் / உறுப்பினர் செயலர், தமிழ்நாடு கடலோர நிலைத்த வாழ்வாதார சங்கம், சென்னை–32.
இணை இயக்குநர், தமிழ்நாடு சமூக தணிக்கைச் சங்கம், சென்னை–15.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக)
அனைத்து திட்ட இயக்குநர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள்.

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை –9.
மாண்புமிகு ஊரக வளர்ச்சி அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை –9.
தலைமைச் செயலளரின் முதன்மை தனிச் செயலாளர், சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரிநகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

பெ. சிவ 24.5.22
பிரிவு அலுவலர்